# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness – PW17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமரன் | Caste | : | |
| S/o. | : | சுப்ரமணி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 08.06.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தற்போது தனிப்பிரிவு குற்ற புலனாய்வு துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.03.2022ம் தேதி நள்ளிரவு 12.15 மணிக்கு சேலம் மாவட்ட தேவூர் காவல் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது அரசிராமணி கிராமம் செட்டிப்பட்டி வன்னியர் தெருவை சேர்ந்த ஆனந்தன் மகன் சித்தநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி புகார் மனுகொடுத்தார். அதனை பெற்று குற்ற எண்.21/2022 இதச பிரிவு 302 ஆக வழக்கு பதிவு செய்தேன். அதனுடைய முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகாரையும் இணைத்து கனம்

நீதித்துறை நடுவர் எண்.1 சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மேல் விசாரணைக்காக அதன் நகலை காவல் ஆய்வளார் பார்வைக்கு வைத்தேன், இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும். புகார்தாரர் என்னிடம் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.06.08 18:36:57 +0530

Principal Sessions Judge,
Salem.